# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2026 சனவரி

## (203) வணிகச் சட்டம்

---

இந்த வினாத்தாள், (203) வணிகச் சட்டம் - 2026 சனவரி பரீட்சை ஆனது 07 கட்டாய வினாக்களை உள்ளடக்கியதாக பகுதிகள் **A, B, C** என மூன்று பகுதிகளாகக் காணப்பட்டது. இந்த வினாத்தாளானது பரீட்சார்த்தியின் வணிகச் சட்டம் பற்றிய மொத்த அறிவையும் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

மதிப்பீட்டுச் செயன்முறையின்போது அவதானிக்கப்பட்ட பொதுவான விடயங்கள் கீழே பொழிப்பாக்கப் பட்டுள்ளன :

## பகுதி - A

**வினா இல. 01**

இந்த வினா 25 புள்ளிகளுக்காக 14 OTQ - களைக் கொண்டிருந்தது.

இவ்வினாவுக்கு அதிகளவானவர்கள் விடையளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வினா இல. **1.10, 1.11, 1.12, 1.14** ஆகியவற்றுக்கு விடையளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**1.10** சில பரீட்சார்த்திகளிடம் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் (SEC) தன்மை, தொழிற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் பற்றிய போதிய புரிதல் காணப்படாததை அவதானிக்க முடிந்தது.

**1.11** பல பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகப் பிணக்குகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய முறைகளை இனங்கண்டு, இவ்வினாவுக்கான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**1.12** காசோலைகளுடன் தொடர்புடைய வங்கிகளின் பொறுப்பு பற்றிய பொதுவான புரிதலைப் பரீட்சார்த்திகள் காட்டியிருந்த போதிலும், பலர் தங்களது விடைத் தாள்களில் அத்தகைய கடமைகளை தெளிவாகவும் துல்லியமாகவும் எழுதத் தவறியிருந்தனர்.

**1.14** பல பரீட்சார்த்திகள் இலங்கையிலுள்ள நிதிப் புலனாய்வு அலகின் தொழிற்பாடுகளை அடையாளங் காணத் தவறியிருந்தனர்.

பகுதி – A இற்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பரீட்சார்த்திகள் குடியியல் சட்டம், குற்றவியல் சட்டம், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம், சர்வதேசச் சட்டம் மற்றும் மாற்றத்தகு சாதனங்கள் பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும். எனவே, பரீட்சார்த்திகள் வணிகச் சட்டப் பாடத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தமது அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி - B

இந்தப் பிரிவானது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மொத்தம் 50 புள்ளிகளுக்கான 5 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது. இந்த 5 வினாக்களுக்குமான பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டம் திருப்திகரமாகக் காணப்பட்டது.

### வினா இல. 02

இவ்வினா காப்புறுதிச் சட்டம் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. இது ஓரளவு இலகுவான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன், அரைவாசி சரியான விடைகளை அளித்திருந்தனர்.

**(a)** காப்புறுத்தத்தக்க நாட்டக் கோட்பாட்டை மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே விபரித்திருந்ததுடன் அதனை விடைக்குப் பிரயோகித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் உச்சளவு நன்னம்பிக்கை மற்றும் இழப்பீட்டுக் கோட்பாட்டைக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் காப்புறுத்தத்தக்க நாட்டத்தைச் சரியாக அடையாளங் கண்டிருந்த போதிலும், அவர்கள் அதனை வரையறை செய்யத் தவறியிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் 2(b) இற்கு சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 03

**(a)** இவ்வினா நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளித்திருந்ததுடன் சரியான விடைகளையும் அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் நோக்கங்கள் மற்றும் கடமைகளைச் சரியாக அடையாளங்காண முடியவில்லை. இவ்வினாவுக்கு குறிப்பான விடைகள் வழங்கப்படவில்லை என்பதும் நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகள் பற்றி பொதுவான பதங்களில் எழுதப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

**(b)** இப்பகுதி அருவச் சொத்துக்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு அரைவாசி சரியான விடைகளை வழங்கியிருந்தனர். மாணவர்கள், தொடர்புடைய சட்டங்களில் தமது அறிவை அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 04

இவ்வினா முகவராண்மைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(a)** பொருள்களை விற்பனை செய்யவும் வணிகத்தின் தன்மையின் அடிப்படையில் தள்ளுபடி விலைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தவும் **நிமால்** கொண்டுள்ள உட்கிடையான அதிகாரத்தைச் சில பரீட்சார்த்திகள் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். அதற்கிணங்க, **நிமாலின்** உட்கிடை அதிகாரம் காரணமாக விற்பனை ஒப்பந்தங்கள் **குமார**வை பிணைக்கக்கூடும்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் 4(b) இற்கு சரியான விடைகளை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் அவசியத்தன்மை பற்றிய சட்டத்தைக் குறிப்பிட்டிருந்தனர். அதிகமான பரீட்சார்த்திகள் முகவரின் கடமைகளைக் குறிப்பிட்டிருந்ததுடன் அந்தச் சந்தர்ப்பமானது **நிமாலின்** கடமையாக இருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 05

இவ்வினா கம்பனிச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது ஓரளவு இலகுவான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்கள் 5(a), 5(b), 5(c) ஆகியவற்றுக்கு சரியான விடைகளை அளித்தள்ளனர்.

**(a)** பல பரீட்சார்த்திகள் கம்பனியின் அமைப்பக விதிகளின் பிரதான உள்ளடக்கங்கள் பற்றி சிறந்த விழிப்புணர்வுடன் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**(b)** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் படி, ஒரு பணிப்பாளராக இருப்பதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகளை அடையாளங் கண்டதன் மூலம் வினாவின் இப்பகுதிக்கு பல பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(c)** ஒரு கம்பனியின் பணிப்பாளர் பதவி வறிதாகின்ற சந்தர்ப்பங்களை அடையாளங் காண பல பரீட்சார்த்திகளால் முடியவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 06

இவ்வினா தொழிற் சட்டத்தைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன், சரியான விடைகளையும் வழங்கியிருந்தனர்.

**(a)** தொழிற் சட்டத்திலுள்ள ''ஊழியர்'' மற்றும் ''சுயாதீன ஒப்பந்ததாரர்'' ஆகியோரை வேறுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் சோதனைகளை பல பரீட்சார்த்திகள் சரியாக அடையாளங் கண்டு, இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது பொருத்தமானவாறு பிரயோகித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் **பிரியங்கா** ஒரு ஊழியர் என சரியாக முடிவு செய்திருந்தனர்.

**(b)** பல பரீட்சார்த்திகள் ETF நன்மைகளைப் பெறுவதற்கு ஊழியர்களுக்கு உள்ள வாய்ப்புகளைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். சிலர் இதனை EPF உரித்துக்களுடன் சேர்த்துக் குழப்பியிருந்தனர்.

**(c)** 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழில் முடிவுறுத்தல் சட்டத்தில் உள்ளடக்கப்படாதவற்றை மிதமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். எவ்வாறாயினும் அதிகமான பரீட்சார்த்திகள் கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்திற்கு இணங்க விடையளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பகுதி - C</u>

### வினா இல. 07

இவ்வினா 2 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

<u>பகுதி (A)</u>

இது ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**(a)** மிதமான எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு மாத்திரமே வலிதான கொடைமுனைவு ஒன்றின் மூலகங்களை அடையாளங் காண முடிந்திருந்தது. சிலர் கொடைமுனைவு பற்றிக் குறிப்பிடாது ஒப்பந்தம் பற்றி மாத்திரம் எழுதியிருந்தனர். சிலர் திகதிகள் பற்றிய புரிதலின்றி விடைகளை அளித்திருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் 'அஞ்சல் விதியை' வெற்றிகரமாக அடையாளங் கண்டிருந்ததுடன் அதனைச் சரியாகப் பிரயோகித்திருந்தனர்.

**(c)** பல பரீட்சார்த்திகள் உடன்படிக்கையொன்றின் மூலகங்களைக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் அவற்றை விவரிக்கத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவை முற்றாகத் தவிர்த்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

<u>பகுதி (B)</u>

**(a)** இந்தப் பகுதி பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அதிகமான பரீட்சார்த்திகள் 1896 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தொடர்புடைய உட்கிடையான பதங்களையும் மற்றும் பொருள்களின் உடைமை மாற்றத்தை ஆளுகை செய்யும் தொடர்புடைய விதிகளையும் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். **நிமாலினால் சுனிலுக்கு** எதிராக வழக்குத்தொடுக்க முடியும்.

**(b)** இந்தப் பகுதிகூட பொருள்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் உறுதிப்படுத்தப்படாத பொருள்கள் மற்றும் எதிர்காலப் பொருள்கள் பற்றிய வரையறுக்கப்பட்ட அறிவையே காட்டியிருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்தப் பகுதிக்கான பல பரீட்சார்த்திகளின் விடைகள் திருப்திகரமாக இருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

மொத்தத்தில் இந்த வினாத்தாளுக்கான செயலாற்றுகை சிறப்பாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் முழு வினாத்தாளுக்கும் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். குறைந்த புள்ளிகள் ஒதுக்கப்பட்ட வினாக்களுக்கு, பரீட்சார்த்திகளின் விடைகள் நீண்டதாக அமைந்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பகுதியிலும் அதிகமான அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் வினாத்தாளில் தரப்பட்ட வழிகாட்டல்களையும் பின்பற்றுதல் வேண்டும். அத்துடன் பரீட்சார்த்திகள் வினாவுக்கான விடையாக அவ்வினாவையே திரும்ப எழுதுவதைக் காணக்கூடியதாக இருந்தது. இதனை அவர்கள் முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள் :</u>**

(1) பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி கேட்கப்படும் பாட விடயங்களில் விசேட கவனம் செலுத்தவும்.

(2) வினாக்களை கூர்ந்து வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும்.

(3) வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs) தவிர்நத ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(4) சுய கற்றல் புத்தகம், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புடைய ஏனைய வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

(5) ஆற்றல்களைக் கட்டியெழுப்புவது சரியாக இனங்காண்பதற்கு அவசியமானதாகும். வினாத்தாளுக்கு விடையளிக்கும்போது அடிப்படைக் கோட்பாடு ரீதியான எண்ணக்கருக்களை ஒப்பீடு செய்யவும்.

(6) கையெழுத்து தெளிவாக எழுதப்படுவதையும் வினா இலக்கங்கள் சரியாக இடப்படுவதையும் உறுதி செய்யவும்.

(7) வினாத்தாளில் தரப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

(8) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து, பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பீடு செய்வதன் மூலம் நடைமுறை அனுபவத்தை மேம்படுத்திக் கொள்ளவும்.

(9) சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

(10) விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்களும் சுட்டிலக்கமும் சரியாக எழுதப்பட்டுள்ளனவா என்பதை மீளவும் பரீட்சித்துக் கொள்ளவும்.

(11) முன்னாயத்தத்துடனும், பரீட்சையில் சித்தியடையும் உறுதியுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -